# டாபிந்து

பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது

ஆரம்பம் 1984

மலர் 36 | இதழ் 01 | 2019 நவம்பர்

# ஜனாதிபதி வேட்பாளர்களிடம் வடக்கிலுள்ள ஆடைத் தொழிற்சாலை பணியாளர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளின் தொகுப்பு 2019

வன்னியைச் சேர்ந்த தொழிற்சாலைத் தொழிலாளர்கள் சுதந்திர வர்த்தக வலயத்திலும் தொழிற்சாலைகள் தாபிக்கப்பட்டுள்ள பிற இடங்களிலும் உள்ள தொழிலாளர்கள் கொண்டுள்ள கரிசனைகளை ஒத்த அதே கரிசனைகளையே கொண்டுள்ளனர். நீண்ட வேலை நேரம்,கட்டாய மேலதிக நேர வேலை, சம்பளத்தில் எதேச்சதிகாரமாக மேற்கொள்ளப்படும் கழிவுகள், சுகாதாரச் சீர்குலைவு மற்றும் மோசமானதும் பாதுகாப்பற்றதுமான வேலை நிலைமைகள் என்பன எல்லாத் தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கும் உள்ள ஒரேவிதமான கரிசனைகளாகும். எவ்வாறிருப்பினும், வன்னியிலுள்ள தொழிலாளர்கள் போருக்குப் பின்னரான பிரதேசங்களுக்கே உரிய குறிப்பான வேறுசில பிரச்சினைகளையும் முன்வைக்கின்றனர்.

**வன்னியிலுள்ள எந்தத் தொழிற்சாலைகளுக்குள்ளும் தொழிற்சங்கங்கள் செயற்படவில்லை**

வடக்கிலுள்ள தொழிற்சாலைகளில் கிட்டத்தட்ட 15,000 தொழிலாளர்கள் தொழில்புரிகின்றனர். அவர்கள் தெற்கிலுள்ள தொழிலாளர்கள் முகங்கொடுக்கின்ற பிரச்சினைகளுக்கு மேலதிகமாக வேறுசில பிரச்சினைகளையும் எதிர்கொள்கின்றனர். தொழிற்சங்கமயமாதலில் உள்ள நன்மைகள் பற்றி இளம் தொழிலாளர்கள் போதிய அறிவைக் கொண்டிராத ஒரு கலாசாரம், தொழிலாளர்கள் தொழிற்சங்கமயமாதல் முயற்சிகளில் பங்கேற்பதை வேலைத்தளங்கள் ஊக்குவிக்காமை, நீர் மற்றும் மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகளுக்கான பற்றாக்குறை, மோசமான வீதிகள் மற்றும் சேதமடைந்த வீடுகள், இளைஞர்களுக்கு மத்தியில் காணப்படும் போதைப்பொருள் பாவனை, பாதுகாப்பின்மை மற்றும் போரின் வெளிப்பாடு காரணமாக (உடல்களில் ஷெல் தாக்குதல்களின் துண்டுகள் காணப்படுதல் போன்றவை) ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள உடல் ஆரோக்கியமானது மேலும் சீர்குலைதல் அத்துடன் கடன் சுமைகள் என்பன வடக்கிலுள்ள தொழிலாளர்கள் குறித்தான மேலதிக கரிசனைகளாகும்.

8ஆம் பக்கம்...

## உள்ளே!

பக்கம் 03 வியர்வைத்துளி கூட்டமைப்பின் முப்பத்தைந்தாவது ஆண்டு நிறைவு
பக்கம் 04 நலமும் வனப்பும்
பக்கம் 05 மனிதத்துவத்தை மதியுங்கள்
பக்கம் 06-07 எமது பணி
பக்கம் 08 ஜனாதிபதி வேட்பாளர்களிடம்...
பக்கம் 10 எண்ணம்

# வியர்வைத்துளி கூட்டமைப்பு

221, வெலபட வீதி, கட்டுநாயக்க.
தொ.பே: 011 4 851 383
மின்னஞ்சல்: dabindu.infoco@gmail.com
முகநூல்: dabindu collective sri lanka


# தன்னிறைவான நாடு

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் 35 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இதற்கு முன்னர் இடம்பெற்ற தேர்தல்களை விடவும் இந்த முறை இடம்பெறும் தேர்தல் மிகவும் வித்தியாசமானதாகும். 3 கட்சிகள் முன்னணியில் இருக்கின்றன. மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக அந்த மூன்று கட்சிகளினதும் வேட்பாளர்கள் பல்வேறு சலுகைகளை வாரி வழங்குவதாகக் கூச்சலிட்டு வாக்குறுதி அளிக்கின்றனர். ஆட்சிக்கு வந்தால் தாம் வழங்கவிருக்கும் வசதிகள் மற்றும் மக்களை வரிச் சுமையிலிருந்து விடுவித்து மகிழ்ச்சிப்படுத்துவதாகவும், தொழில் பிரச்சினைகள், சம்பள அதிகரிப்பு தொடர்பில் கதை பேசி மிகைப்படுத்துகின்றனர். ஒருவரை ஒருவர் அவதூறு செய்கின்றனர். ஒழுக்கத்தை மதிக்காமல் தாம் வகிக்கும் பதவியின் பெறுமானம் மற்றும் சமூகப் பணி என்பன தொடர்பில் அறியாமல் அவர்கள் வெளியிடும் வார்த்தைகள் அர்த்தமற்றவையாகும். தமது அதிகாரத்தைக் காட்டி தமது குடும்பத்தவர்களின் சுகபோகத்துக்கான வயிற்றுப் பிழைப்புக்காக அல்லது பரம்பரையாக வந்த அதிகாரத்தைப் பாதுகாப்பதற்காக மக்களின் விருப்பத்தைப் பெறத் துடிக்கின்றனர்.

இந்த அதிகாரப் பேராசையினால் அதிகாரத்துக்கு வருவதற்காக அவர்கள் பல வாக்குறுதிகளை வழங்குவது எமது நன்மைக்காகவா? இல்லை... அவர்களது அபிவிருத்திக்காகவே அவர்கள் அவ்வாறு செய்கின்றனர். தம்மிடம் அதிகாரம் இல்லாத வேளையில் அரசியலில் இருந்து விலகிச்சென்று இருந்து விட்டு இப்போது களத்தில் இறங்கியுள்ள பெரும்பாலானோர் தமது ஆரம்பக் கட்சியை மறந்துவிட்டு தமது நன்மைக்காகப் பகிரங்கமாக வக்காலத்து வாங்குவதுடன், அடுத்தவர்களை நகைச்சுவையாக விமர்சிப்பதையும் அனைத்து மேடைகளிலும் காணலாம். எமது நாட்டுக்கும் தேசத்துக்கும் பணியாற்றுவதற்காகச் சண்டை போடுவோர் மத்தியில் கருத்து முரண்பாடுகள் இருப்பதைக் காண முடிகின்றது.

இலங்கையின் சனத்தொகையில் 52 சதவீதமானோர் பெண்களாக இருந்தபோதிலும் அவர்களில் உயர் கல்விபெற்று தொழிலில் ஈடுபடுவோர் எத்தனை பேர்? விவசாய கைத்தொழிலுடன் தமது வாழ்க்கையை முன்னெடுப்போர் சிறிதளவானோரே. எமது நாட்டுப் பெண்களில் பெரும்பாலானோர் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ளனர். மேலும் பலர் குறைந்தளவு சம்பளத்தில் சுதந்திர வர்த்தக வலயங்களில் உழைப்பைச் செலவிட்டு பணியாற்றுகின்றனர். விவசாயம், மீன்பிடி மற்றும் பெருந்தோட்டத் துறையில் கூடுதலான பெண்கள் சேவையாற்றுகின்றனர். எந்தவோர்ஆட்சியாளரினதும் கவனம் அவர்கள் தொடர்பில் செலுத்தப்படவில்லை. தரமான கல்வி அவர்களுக்குக் கிடைக்காமையினால் குறைந்த சம்பளத்துக்கு உழைப்பில் ஈடுபட வேண்டியுள்ளது. உழைப்பின் பெறுமதிக்கு உரிய மதிப்பில்லை.

விவசாயத்தினால் முன்னேறக்கூடிய நாட்டில் நாம் வாழ்ந்த போதிலும் விவசாயத்துக்காக வயலில் இறங்கிய விவசாயிகளின் பிள்ளைகள் இப்போது மண்வெட்டியுடன் வயலில் இறங்குவதில்லை. இறப்பர் பால் வெட்ட, கருவா பதப்படுத்த, தேயிலைக் கொழுந்து பறிக்க, சுயதொழிலில் ஈடுபட என்று எத்தனை பேர் செல்கின்றனர்? நாட்டில் தொழில்நுட்பம் பெரிதும் வளர்ச்சி அடைந்துள்ளது. இந்தக் காலத்தில் அனைத்துப் பொருட்களையும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வது பொருத்தமானதா? நிலம், உழைப்பு மற்றும் மூலதனம் ஆகியவற்றை வைத்துக்கொண்டு அவ்வாறான உற்பத்திகளில் ஏன் எம்மால் ஈடுபட முடியாதுள்ளது? தொழிலாளர்கள் நாட்டிலுள்ள வறிய மக்களுக்குத் தேவைப்படும் முறையிலான பொருளாதாரத் திட்டமிடல் இல்லாமல், நாட்டில் உற்பத்தியை மேற்கொள்ளும் ஆற்றலை அதிகரிக்காமல், இந்த நாட்டின் அபிவிருத்தியை இன்னும் பல தசாப்தங்களுக்கு அடைய முடியாது. இவற்றுக்கு பொறுப்பேற்க வேண்டியது தொலைநோக்கற்ற ஆட்சியாளர்கள் அல்லவா?

# அவள்

## சிந்திப்பதற்கு சில விடயங்கள்...

பெண்மை என்பது பலமாகும். அது இந்த உலகில் வாழும் அனைத்துப் பெண்களிடமும் உள்ள பொதுவான நியதியாகும். அதன் காரணமாகப் பெண்கள் சகல அழுத்தங்களையும் தாங்கிக்கொண்டு இருக்கின்றனர். பெண்கள் தமது சக்தியை இனங்காண்பதில் உள்ள சிரமமே அவர்களது பலவீனமாகும். இதனால் எமது பெண்கள் தமது வேதனைகளை ஒத்திப்போடுகின்றனர். பெண்களிடமுள்ள பலத்தை வெளிப்படுத்துவதற்கு சமூகத்தில் அவர்களுக்குள்ள வாய்ப்பு மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாகும். அதன் காரணமாகவே உலகிலுள்ள ஒட்டுமொத்தப் பெண்களில் பெரும்பாலானோர் மன அழுத்தத்தினால் பாதிக்கப்படுகின்றனர்.

தமது காதல் தொடர்பு முறிவடைவது தொடக்கம் தமது பிள்ளைகள், கணவர், குடும்பத்தினருக்காக, சிலவேளைகளில் தமது கணவர் சுகவீனமுற்றால் அவ்வேளையிலேயே தனது குடும்பதின் பெற்றோர் அல்லது சகோதர சகோதரிகளால் கைவிடும் நிலை ஏற்படலாம். ஆனால் அனைத்தையும் திட்டமிட்டு நல்ல முறையில் தீர்க்கும் சக்தி உங்களிடம் உள்ளது. அதனை நீங்கள் திட்டமிடாவிட்டாலும் உங்களை நீங்களே கட்டுப்படுத்தாவிட்டாலும் பெண் இயல்பாகவே திட்டமிடல் ஆற்றல் உடையவர்.

குடும்பம் எனும் பெருவிருட்சத்தின் மூல வேர் பெண்ணே. மூல வேர் நிலத்தில் தாங்கி அனைத்தையும் பெற்று விருட்சத்தின் கிளைகளிலிருந்து உதிரும் இலைகளால் அந்த மரம் போசணை பெறுவது போன்று வீட்டின் உயிர்நாடியான தாய் அல்லது மனைவி இந்த அனைத்துச் சுமைகளையும் சுமக்கிறாள். பெண்ணானவள்

11ஆம் பக்கம்...






# வியர்வைத்துளி கூட்டமைப்பின் முப்பத்தைந்தாவது ஆண்டு நிறைவு

வியர்வைத்துளி கூட்டமைப்பின் 35 ஆண்டுகால பணி நிறைவு பற்றிய நிகழ்வு கடந்த செப்டெம்பர் 8ஆம் திகதி கட்டுநாயக்க நட்டாலியா விழா மண்டபத்தில் கோலாகலமாக நடைபெற்றது. நீண்ட காலமாக எம்முடன் இணைந்து பணியாற்றி வியர்வைத்துளி கூட்டமைப்புக்கு பலத்தையும், தைரியத்தையும் வழங்கி எமக்கு வழிகாட்டிகளாக இருந்த பல்வேறு சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் சிலரும், எமது உறுப்பினர்களும், அத்துடன் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயம் மற்றும் வட பிராந்தியம் என்பவற்றைச் சேர்ந்த பெண் தொழிலாளர்களும் நிகழ்வில் பங்குபற்றினர்.

எமது அமைப்பின் வெளிக்கள அலுவலர் செல்வி. மனீஷா பெர்ணான்டோ வரவேற்புரை நிகழ்த்திய பின்னர், எம்முடன் பணியாற்றி எம்மை விட்டுப்பிரிந்த சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் நினைவு கூரப்பட்டனர். அதன் பின்னர் பாரம்பரியத்துக்கு முதலிடமளித்து வியர்வைத்துளி கூட்டமைப்பு மேலும் ஒளி பெற வேண்டும் எனும் பிரார்த்தனையுடன் எம்முடன் இணைந்துகொண்ட சிவில் அமைப்புக்களின் தலைவர், தலைவியர் மற்றும் தொழிலாளர் தலைவர், தலைவியரால் மங்கள விளக்கு ஏற்றப்பட்டது.

எப்போதும் ஏனைய இனங்களுக்கும், மொழிக்கும் முதலிடமளித்து செயற்பட்டு வரும் வியர்வைத்துளி கூட்டமைப்பானது நிகழ்வின் வரவேற்பு நடனத்தை வழங்குவதற்காக வியர்வைத்துளி கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளரான திருமதி. கிருஷாந்தி அவர்களது மகள் அழைக்கப்பட்டார். அவர் அரங்கேற்றிய மிகவும் ரம்மியமான பரத நாட்டியத்தால் அந்த மண்டபத்தில் நிறைந்திருந்த பிரமுகர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். அதன் பின்னர் 35 ஆண்டுகளாக சமூகப் பணியாற்றிய வியர்வைத்துளி கூட்டமைப்பின் வரலாறு மற்றும் தற்போதைய பயணப்பாதை, வியர்வைத்துளி கூட்டமைப்பு சந்தித்த சவால்கள்,பெற்ற வெற்றிகள், அதுவரை காலம் அதன் பயணத்துக்கு வலுச்சேர்த்து அதனைச் சுற்றியிருந்த அனைவரையும் நினைவுகூர்ந்து,அவர்களுக்கு நன்றி தெரிவித்து வியர்வைத்துளி கூட்டமைப்பின் செயற்திட்ட இணைப்பாளர் திருமதி. சமிலா துஷாரிஉரையாற்றினார்.

வியர்வைத்துளி கூட்டமைப்பை ஆரம்பித்து தொழிலாளர்களின் உரிமைகளுக்காகப் போராடி வரும், 1984 ஆம் ஆண்டிலிருந்து நீண்ட காலமாகப் பெண் தொழிலாளர்கள் முகம் கொடுத்து வந்த துரதிஷ்டவசமான சம்பவங்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து அவர்களுக்குப்பக்கபலமாக இருந்து, அவர்களுக்காகப் போராட்டத்தில் ஈடுபட்ட திருமதி.எச்.ஐ.சமன்மலிஆற்றிய தொடர்ச்சியான பணியைப் பாராட்டி, தொடர்ந்தும் தொழிலாளர்களுக்காகப் போராடுவதற்கான பலமும் தைரியமும் அவருக்குக் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்தித்து அவரது 35 ஆண்டு சேவையைப் பாராட்டி வியர்வைத்துளி கூட்டமைப்பின் பணியாளர் குழாம் அவருக்கு பரிசும் வழங்கியது.

அதன் பின்னர் 35 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு மற்றும் வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் ஆரம்பமானது. அதற்காக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான அமைப்பின் முன்னேற்ற அறிக்கை திட்ட அலுவலரானசகோதரி ஜயனி பெர்னான்டோவினால் சமர்ப்பிக்கப்பட்டது. வியர்வைத்துளி கூட்டமைப்பினால் கடந்த ஆண்டில் செயற்படுத்தப்பட்டு வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்ட திட்டங்கள் தொடர்பிலும்,தற்போது ஆரம்பிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற திட்டங்கள் தொடர்பிலும் மீளாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இரண்டாவதாக, செயற்திட்டங்கள் தொடர்பாகவும், எமது அமைப்பின் முன்னேற்ற அறிக்கையும் நிதி அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டன. அதனை எமது நிதி அலுவலர் திருமதி. மாலா ஹேவாவிதாரண சமர்ப்பித்த பின்னர் அந்த அறிக்கை சபையால் அங்கீகரிக்கப்பட்டது. அதன் பின்னர் சிறுமி பிரபா வியத்மி வழங்கிய நடனத்தினால் சபை உற்சாகமடைந்தது. பல ஆண்டுகளாக எம்முடன் இணைந்து செயற்பட்ட வியர்வைத்துளி கூட்டமைப்பின் தொழிலாளர் செயற்பாட்டாளரான திருமதிஜீவா தில்ருக்ஷி அவர்களுக்கு எமது அமைப்பினால் வழங்கப்பட்ட உதவிகளை நினைவுகூர்ந்து, இணைப்பாளர் சமிலா துஷாரிக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. அவர்களுடன் இணைந்திருந்து அவர்களது உரிமைகளை வென்றெடுப்பதற்கு வியர்வைத்துளி கூட்டமைப்பு வழங்கிய பலம் பாரியது என அவர் தெரிவித்தார். அது எமது அமைப்புக்குக் கிடைத்த பெறுமதியான பாராட்டாகும்.

பொதுச்சபைக் கூட்டத்தின் பின்னர் 2019ஆம் ஆண்டுக்கான வியர்வைத்துளி கூட்டமைப்பின் புதிய பணிப்பாளர் சபை தெரிவு செய்யப்பட்டது. அந்த பணிப்பாளர் சபை ஐந்து உறுப்பினர்களைக் கொண்டதாகும். அதன்பின்னர் 35 ஆண்டு நிறைவை முன்னிட்டு அனைவரும் வருகை தந்தமைக்காக நன்றி தெரிவிக்கப்பட்டு மதிய உணவு உபசாரத்துடன் நிகழ்வு நிறைவடைந்தது.

# நலமும் வனப்பும்



**மரணம் விளைவிக்கும் கர்ப்பப்பை புற்றுநோயை இனங்காண்பது எவ்வாறு என்பது உங்களுக்குத் தெரியுமா?**

மார்புப் புற்றுநோய் என்பது இலங்கையில் ஆகக்கூடுதலாக பெண்கள் இரையாகும் புற்றுநோயாகும். இரண்டாவது இடத்தைக் கர்ப்பப்பை புற்றுநோய் பெறுகின்றது. உயிர்கொல்லியான கர்ப்பப்பை புற்றுநோயை முன்கூட்டியே இனங்கண்டால், அதற்கு உரிய சிகிச்சை பெற்று முழுமையாக சுகமடையக்கூடிய நிலை உள்ளது. கர்ப்பப்பை புற்றுநோய்க்கு இரையாகும் பெண்களில் 95% ஆனோர் பாலியல் ரீதியில் தொற்றுக்கு உள்ளாகும் HPV அதாவது "ஹியூமன் பெப்பிலோமா" (Human Papilloma Virus) தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களாவர்.

குறைந்த வயதில் பாலியல் வாழ்க்கையை ஆரம்பித்த பெண்கள், பல நபர்களுடன் உறவில் ஈடுபடும் பெண்கள், பல பெண்களுடன் உறவு வைத்திருக்கும் ஆண்களுடன் உறவுகொள்ளும் பெண்கள், பாதுகாப்பற்ற முறையில் பாலியல் உறவுகொள்ளும் பெண்கள்,வினைத்திறனற்ற அல்லது தொடர்ச்சியாகப் புகைப்பிடிக்கும் பெண்கள் மற்றும் பல்வேறு நோய்களின் நிமித்தம் நோயெதிர்ப்புச் சக்தியைக் குறைக்கும் மருந்துகளைப் பாவிக்கின்ற பெண்கள் ஆகியோருக்கு கர்ப்பப்பை புற்றுநோய் ஏற்படுவதற்கான ஆபத்து காணப்படுகின்றது.

பின்வருபவை கர்ப்பப்பை புற்றுநோய் அச்சுறுத்தல் இருக்கின்றதா என முன்கூட்டியே அறிந்து கொள்ளக்கூடிய சில அறிகுறிகளாகும். இவற்றை நீங்களும் அனுபவித்திருந்தால் உடனடியாக பெண் நோயியல் மருத்துவரைச் சந்திப்பது அறிவுபூர்வமான செயற்பாடாக அமையும்.

■ **யோனிப்பாதையிலிருந்துஅசாதாரணமான திரவம் வெளியேறுதல்**

புற்றுநோய்கர்ப்பப்பையில் அதிகரிக்கும் போது கர்ப்பப்பைச் சுவர் இழையங்கள் கிழிபடுதல் அதற்குக் காரணமாகும். அந்தத் திரவம் கடும் துர்நாற்றமானதாக இருக்கும்.

■ **உள்ளக மற்றும் வெளியில் ஏற்படும் கொப்புளங்கள்**

பிரபலமான பெண்ணியல் மருத்துவரான ரோசா மரியா என்பவரது கூற்றுக்கு அமைய, அவ்வாறு ஏற்படும் கொப்புளங்களும் கர்ப்பப்பை புற்றுநோய் ஏற்படுவதற்கான ஆபத்தான அறிகுறியாக அமையலாம்.

■ **யோனிப்பாதையில் ஏற்படும் முறையற்ற குருதிக் கசிவு**

கர்ப்பப்பைச் சுவர்களில் புற்றுநோய் வளர்ச்சியடையும் போது ஏற்படும் உலர்ந்த நிலை மற்றும் இழையங்கள் கிழிந்துபோவதனால் வேதனை மற்றும் குருதிக் கசிவு என்பன ஏற்படலாம். சில வேளைகளில் மலம் கழிக்கும் போது அல்லது சிறுநீர் கழிக்கும் போது அது ஏற்படலாம். அதன் காரணமாக மாதவிடாய் அற்ற நேரத்தில் குருதிக் கசிவு இடம்பெற்றால் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெற வேண்டும்.

■ **குருதிச்சோகை**

உணவுப் பழக்கங்களில் மாற்றம் இல்லாத போதிலும் உடற்சோர்வு ஏற்படுதல், சிறிதாகக் களைப்படைந்தாலும் இதயத் துடிப்பு வேகம் அசாதாரணமாக அதிகரித்தல் போன்றவை குருதிச்சோகையின் அறிகுறிகளாகும். கர்ப்பப்பை புற்றுநோய் அதிகரிக்கும் போது ஏற்படும் முறையற்ற குருதிக் கசிவு காரணமாக குருதிச்சோகை ஏற்படும் என்பதனை நினைவில் வைத்திருப்பது முக்கியமானதாகும்.

■ **சிறுநீர் வெளியேறும் போது ஏற்படும் பிரச்சினை**

கர்ப்பப்பை வீக்கமடைதல் காரணமாக சிறுநீர்க் குழாய் மற்றும் சிறுநீரகங்கள் அழுத்தப்படுகின்றன. அப்போது சிறுநீர்ப்பாதை தடைப்படுவதனால் சரியான முறையில் சிறுநீர் கழிக்கும் போது கடுமையான வேதனை ஏற்படலாம்.

■ **கால்கள், இடுப்பு பகுதி மற்றும் முதுகுப் பகுதியில் ஏற்படும் தொடர்ச்சியான வேதனை**

கர்ப்பப்பை வீக்கம் காரணமாக உள்ளக அவயவங்கள் நசுங்குவதனால் குருதி நாளங்களில் தடை ஏற்படுகிறது. அதன் காரணமாக மேலே குறிப்பிட்டவாறு வேதனை ஏற்படுதல் மற்றும் கால்கள்,கண்களை சுற்றிய பகுதியிலும் வீக்கம் ஏற்படலாம்.

■ **நிறை குறைவடைதல்**

உணவில் சுவையின்மை அல்லது உணவு சுவை உணர்வு அசாதாரணமாகக் குறைவடைதல் புற்றுநோய் காரணமாக ஏற்படக்கூடிய பிறிதோர் அறிகுறியாகும். கர்ப்பப்பை வீக்கம் அடைவதனால் ஈரல் நசுங்குவதே அதற்குக் காரணமாகும்.

எப்படியிருந்த போதிலும் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டிய முக்கிய விடயம் என்னவென்றால் மேலே சொல்லப்பட்ட அறிகுறிகள் ஏற்பட்டால் நிச்சயமாக உங்களுக்கு புற்றுநோய் ஏற்பட்டுள்ளது என நினைக்கக்கூடாது. அதனை தகைமை பெற்ற மருத்துவர்களே தீர்மானிக்க வேண்டும். நீங்கள் கர்ப்பப்பை புற்றுநோய் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி உள்ளீர்களா? இல்லையா? என்பது தொடர்பில் பரிசோதனை மூலம் முன்கூட்டியே தெரிந்து கொள்ளலாம். மாதவிடாய் ஏற்படாத நாளில் அரச மருத்துவமனை அல்லது பிரதேச சுகாதார மருத்துவ அலுவலர் அலுவலகம் ஊடாக நடத்தப்படும் பெண் நோயியல் கிளினிக்கில் அல்லது தனியார் மருத்துவமனையில் நீங்கள் வேதனையற்ற இலகுவான பரிசோதனையை மேற்கொள்ளலாம். இந்த விடயத்தை நீங்கள் கவனமெடுத்து, இந்நிலை ஏற்படுவதனைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

# மனிதத்துவத்தை மதியுங்கள்




1989 ஆம் ஆண்டு இலங்கை மக்களால் ஒருபோதும் மறக்க முடியாத ஆண்டாகும். நாட்டில் நிலவிய அரசியல் நெருக்கடி காரணமாக இடம்பெற்ற பயங்கரங்களே அதற்குக் காரணமாகும். அக்காலப்பகுதியில் ஆட்களை வெள்ளை வேன்களில் கொண்டுசென்று காணாமல் போகச்செய்தல், சுட்டுக்கொன்று டயர்களில் போட்டு வீதிகளில் எரித்தல் போன்றவை இடம்பெற்றன. அவசரகால சட்டத்தின் கீழ் கைது செய்தல், எப்போதும் வீடுகளை சோதனையிடுதல், சந்தேகத்துக்கு இடமான எதனையாவது கண்டால் பொலிஸுக்குக்கொண்டு செல்லுதல், பிள்ளைகளைப் பிடித்துச் செல்லுதல் மற்றும் அடையாள அட்டைகளைச் சேகரித்தல் என பல சம்பவங்கள் அக்காலத்தில் இடம்பெற்றன.

ஈவிரக்கமற்ற மனிதர்கள் மேற்கொண்ட மனிதப் படுகொலைகள் அநேகம். கொல்லப்பட்ட உடல்கள் விலங்களுக்கு உணவாகின. துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர்களின் குருதி நிலத்தில் ஊறியது. ஆறுகளில் உடல்கள் மிதந்து சென்றன. மனித மண்டையோடுகள் வேலிகளின் மேல் தொங்கவிடப்பட்டிருந்தன. அக்காலத்தில் காட்டுச் சட்டமே கோலோச்சியது.

மேலே குறிப்பிடப்பட்ட காலப்பகுதியில் அதாவது, 1989 ஒக்டோபர் 27ஆம் திகதி சட்ட ஆலோசகர் லயனல் மற்றும் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் பணியாற்றிய சகோதரர் ரஞ்சித் ஆகிய இருவரும் காணாமலாக்கப்பட்டு, பின்னர் கொலை செய்யப்பட்டு றத்தொளுவ சந்தியில் போடப்பட்டனர். அத்தகைய படுபாதகச் செயல் ஏன் அவர்கள்மீது புரியப்பட்டது?

சகோதரர் ரஞ்சித் நிறுவனத்தில் நடைபெறும் அநீதிகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தது மட்டுமன்றி சுதந்திர வர்த்தக வலயத்திலுள்ள ஏனைய தொழிற்சாலைகளில் இடம்பெறும் அநீதிகளுக்கு எதிரான விடயங்களை வியர்வைத்துளி கூட்டமைப்புக்கு வழங்கினார். அதற்கு எதிராக நிருவாகத்தினால் பணி நீக்கம் செய்யப்பட்டார். அந்த விடயத்துக்கான சட்ட ஆலோசகராக சகோதரர்லயனல் முன்வந்து செயற்பட்டார். நிறுவனத்தில் உள்ளக விசாரணை நடைபெற்றது. மீண்டும் சகோதரர் ரஞ்சித்துக்கு வேலை கிடைத்தமையால் ஆத்திரமடைந்த நிருவாகத்தினர் மேற்படி அநியாயத்தைச் செய்தனர்.

நீங்கள் இருவரும் அரச துரோகிகளாக முத்திரை குத்தப்பட்டாலும் நாம் அறிந்தவரை நீங்கள் அவ்வாறு இல்லையென்று அடித்துக் கூறலாம். நீங்கள் வர்த்தக வலயத்தில் இடம்பெற்ற அநீதிகளுக்கு எதிராகப் போராடியதை மட்டுமே செய்தீர்கள் என அழுத்திச் சொல்ல வேண்டும். பௌத்த நாடான இலங்கையில் உங்களது உடலைப் புதைப்பதற்குக்கூட ஆறடி நிலம் கிடைக்காத நிலை ஏற்பட்டது. நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து 27 ஆண்டுகள் ஆகின்றன. இருப்பினும் வர்த்தக வலயத்தில் வியர்வைத்துளி கூட்டமைப்பு இன்றும் நிலைத்துள்ளது. நீங்கள் ஆற்றிய பணி காரணமாக வர்த்தக வலயத்தில் உங்களது நினைவுகளுடன் வியர்வைத்துளி கூட்டமைப்பு தொடர்ந்தும் செயற்படுகின்றது. நீங்கள் ஆற்றிய பணியை நாம் நிறைவேற்றுகிறோம். எனவே காணாமற்போனோரின் குடும்பங்களின் கூட்டமைப்பினால் இம்முறையும் றத்தொளுவ சந்தியில் அமைந்துள்ள காணாமற்போனோர் நினைவிடத்துக்கு அருகாமையில் அவர்களை நினைவுகூரும் நினைவேந்தல் நிகழ்வு 2019.10.27 ஆம் திகதி நடத்தப்பட்டது. குறித்த நிகழ்வானது, பல்வேறு அமைப்புக்கள், நபர்கள், ஊடகத் துறையினர் மற்றும் வடக்குக் கிழக்கிலிருந்து வருகைதந்த காணாமற்போனோரின் குடும்ப உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றது.

# கிளிநொச்சியில் நடைபெற்ற தலைமைத்துவப் பயிற்சி



தொழிலாளர்களின் திறமைகளையும் ஆற்றல்களையும் இனங்கண்டு அவர்களது தலைமைத்துவப் பண்புகளை மேம்படுத்தி, அவர்கள் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக இளம் பெண் தொழிலாளர்களையும் ஆண்களையும் வலுவூட்டும் நோக்குடன் வியர்வைத்துளி கூட்டமைப்பினால் நடத்தப்படும் பயிற்சித்தொடரின் இரண்டாவது பயிற்சி செப்டெம்பர் மாதம் கிளிநொச்சி மாவட்டதில் நடைபெற்றது.

மேற்படி பயிற்சிகள் ஊடாக பால்நிலை சமத்துவம், தொழில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு, தொழில் சட்டங்கள், தொழிற்சங்கச் சட்டங்கள், பாலியல் மற்றும் இனவிருத்தி சுகாதாரம் என்பன தொடர்பான தெளிவூட்டல்கள் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டன. இப்பயிற்சிகளின் போது தொழிலாளர் உரிமைகள் தொடர்பான அமர்வும் நடைபெற்றது. தொழிலாளர் உரிமைகள் என்றால் என்ன? அவை நிறுவனத்தில் கிடைக்கின்றனவா? நாம் தொழிலாளர் உரிமைகளை வென்றெடுக்க எவ்வாறு செயற்பட வேண்டும்? போன்ற விடயங்கள் தொடர்பில் அதில் விளக்கமளிக்கப்பட்டன. வளவாளர்களாக செல்வி. யோகேஸ்வரி கிருஷ்ணன் மற்றும் திருமதி ஹர்னிகா தனன்ஜன் ஆகியோர் கலந்துகொண்டனர். பங்கேற்பு முறையில் நடைபெற்ற மேற்படி பயிற்சியில் பல்வேறு குழுச் செயற்பாடுகளும் இடம்பெற்றன.



# ஜனாதிபதி தேர்தலுக்காக தொழிலாளர்களின் கோரிக்கைகளை தயாரிக்கும் செயற்றிட்டம்

2019 ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களிடம் கையளிப்பதற்காக கொள்கை விஞ்ஞாபனத்தை உருவாக்கும் முயற்சியைவியர்வைத்துளி கூட்டமைப்பு எடுத்திருந்தது. கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயம் மற்றும் வடக்கு பிரதேச தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களையும் இணைத்து, அவர்களது பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடி மேற்படி கொள்கை விஞ்ஞாபனத்தைத் தயாரிப்பதற்கான செயற்பாடுகள் கடந்த மாதம் வியர்வைத்துளி கூட்டமைப்பு அலுவலகத்திலும் வவுனியா நெல்லி ஸ்டார் விழா மண்டபத்திலும் நடைபெற்றன. அதன்போது கட்டுநாயக்க பிரதேச தொழிலாளர்கள் முன்னிலையில் உரையாற்றுவதற்காக பெண்கள் வள நிலையத்தின் பணிப்பாளர் சுமேதா பெரேரா அவர்களும், வடக்கிலுள்ள வவுனியா மற்றும் கிளிநொச்சி பிரதேசங்களில் வசிக்கும் தொழிலாளர்களின் முன்னிலையில் உரையாற்றுவதற்காக சட்டத்தரணி சுவஸ்திகா ஆறுலிங்கம் அவர்களும் வளவாளர்களாகப் பங்குபற்றி இருந்தனர். சுதந்திர வர்த்தக வலயத்தில் பணியாற்றும் 30 தொழிலாளர்களும், வட பிராந்தியத்தில் பணியாற்றும் 30 தொழிலாளர்களும் கலந்துரையாடல்களில் பங்குபற்றினர். குறித்த கலந்துரையாடல்கள் மூலம் பெற்ற தகவல்களை உள்ளடக்கி தொழிலாளர்களுக்கான கொள்கை விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டது.



# வேலையாட்களின் நியாயசபை

கடந்த செப்டெம்பர் 08 ஆம் திகதி கட்டுநாயக்க நட்டாலியா விழா மண்டபத்தில் நடைபெற்ற வேலையாட்களின் நியாயசபையில் சுதந்திர வர்த்தக வலயத்திலும், அதற்கு வெளியேயும் பணியாற்றும் ஆடைத் தொழிற்சாலைப் பெண் தொழிலாளர்கள் நிறுவனங்களிலும் வீதிகளிலும் முகங்கொடுக்கின்ற பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டன.வருகை தந்திருந்த தொழிலாளர்கள் மற்றும் ஏனைய அமைப்புக்களின் பிரதிநிதிகள் வரவேற்கப்பட்ட பின்னர், தொழில் நியாயசபையின் நீதிபதிகளாக வர்த்தக, கைத்தொழில் ஊழியர் சங்கத்தின் செயலாளர் திரு. சுரங்ஜய அமரசிங்க, இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் உப செயலாளர் திரு. கேசர கொட்டேகொட, சட்டத்தரணி செல்வி. லக்மாலி ஹேமச்சந்திர மற்றும் சட்டத்தரணி செல்வி. சுவஸ்திகா ஆறுலிங்கம் ஆகியோர் இந்த நியாயசபைக்கு வரவேற்கப்பட்டனர். கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி வருகை தந்த பெண்கள் மற்றும் வட பிராந்திய வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களுள் இருவரும் பங்குபற்றி தாம் முகங்கொடுக்கும் நிலைமையை சபைக்கு முன்வைத்தனர். அது தொடர்பாகவுள்ள சட்டங்கள் குறித்து நியாயசபை தெளிவுபடுத்தியதுடன், அந்த விடயங்களை அடிப்படையாகக்கொண்ட அறிக்கையொன்று தயாரிப்பதற்கான உடன்பாடும் எட்டப்பட்டது.





# வர்த்தக நாமம் தொடர்பான தகவல்களை பகிர்ந்து கொள்ளும் ஐரோப்பிய சுற்றுலா

ஆடைத் தொழில்துறையிலுள்ள பெண் தொழிலாளர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை மையப்படுத்தி உலகளாவிய வலையமைப்பு உறவுகளைப் பலப்படுத்தும் நோக்குடன் Free Workers Union (FAU) அமைப்பினது அழைப்பின் பேரில் வியர்வைத்துளி கூட்டமைப்பு மற்றும் இந்தோனேசியாவின் அமைப்பு ஆகியவை கடந்த மாதம் 7 ஆம் திகதி தொடக்கம் ஒரு மாத காலம் ஜேர்மன், பிரான்ஸ், ஸ்பெய்ன் ஆகிய நாடுகளில் நடைபெற்ற 14 நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்கான வாய்ப்பைப் பெற்றன.

மேற்படி சிறந்த வாய்ப்பை ஏற்று வியர்வைத்துளி கூட்டமைப்பின் நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் திருமதி சமிலா துஷாரி பங்குபற்றி, ஆடைத் தொழில்துறையில் பணியாற்றும் பெண்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தி கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

ஆடைகள் வழங்கல் சங்கிலியில் வர்த்தக நாமங்களின் உரிமையாளர்களின் வகிபாகம், ஒழுக்கநெறிக் கோவை, சமூகக் கணக்காய்வின் உண்மையான செயற்றிறன் தொடர்பில் விசேடமாகக் கலந்துரையாடப்பட்டது. உயிர் வாழ்வதற்குப் போதுமான சம்பளம் தொடர்பில் அங்கே விசேடமாகக் குறித்துரைக்கப்பட்டது. ஜேர்மன், பிரான்ஸ், ஸ்பெய்ன் ஆகிய நாடுகளின் FAU, CNT தொழிற்சங்க செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், CCC மற்றும் Tie Asia அமைப்புக்களின் பிரதிநிதிகள் போன்றோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். அச்சு மற்றும் வானொலி மூலமான கலந்துரையாடல்களில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பும் வியர்வைத்துளி கூட்டமைப்புக்கு கிடைத்தது.





**ஜனாதிபதி வேட்பாளர்களிடம்...** (1ஆம் பக்கத் தொடர்ச்சி)

### குறித்த தொழிலாளியே அவரது குடும்பத்தில் வருமானத்துக்கான ஆதாரமாக இருத்தல்

அநேக சந்தர்ப்பங்களில் குறித்த தொழிலாளிதான் அவரது குடும்பத்துக்காக உழைக்கும் பிரதான நபராக அல்லது ஒரேயொரு நபராகக் காணப்படுகின்றார். சில தொழிலாளர்கள் தமது பெற்றோர்கள் உழைப்பதில்லை என்றும், இன்னும் சிலர் தமது பெற்றோர்களுள் ஒருவர் அல்லது இருவருமே யுத்தத்தில் பலியாகிவிட்டனர் என்றும், மேலும் சில தொழிலாளிகள் தங்களுடைய பெற்றோர்கள் மிகவும் கடினமான கூலி வேலைகளில் ஈடுபடுகின்றனர் என்றும் குறிப்பிட்டனர்.

மேலும் குறித்த தொழிலாளர்கள் கடனைப் பற்றியும் கூறினர். வேலைப் பற்றாக்குறை காரணமாக வீட்டுச் செலவுகளைச் சமாளிப்பதற்காகக் கடன்படுகின்ற நிலைமையானது அவர்களின் குடும்பங்களை மேலும் நிதி நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. ஆகவே, ஒரு பெண் தொழிலாளி அவளது உரிமைகளுக்காகப் போராடும் விடயத்தில் பாரிய பாதுகாப்பின்மைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. அத்துடன் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவள் துஷ்பிரயோகங்களை எதிர்கொண்டாலும் வாய்மூடி இருப்பதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றாள்.

### தொழிலாளர்கள் கூறுபட்ட இல்லங்களிலும் சமூகங்களிலும் இருந்து வருகின்றனர்

தொழிலாளர்கள் சேதமடைந்த வீதிகள், தெருக்களில் விளக்குகளுக்கான பற்றாக்குறை மற்றும் இரவு நேரங்களில் வேலை முடிந்து திரும்பிச் செல்கையில் உள்ள குறைந்தளவிலான பாதுகாப்பு ஆகியன பற்றியும் கூறினர். "நாம் மறுநாள் வேலைக்குத் திரும்பாவிட்டாலன்றி அவர்கள் ஒருபோதும் கவலைப்படமாட்டார்கள். அது நாம் உயிருடன் இருந்தாலும் சரி செத்துப்போனாலும் சரி" என ஒரு தொழிலாளி குறிப்பிட்டார்.

வாழ்வாதார வாய்ப்புக்கள் இல்லாத காரணத்தினால் இளைஞர்களுக்கு மத்தியில் போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளமை பற்றித் தொழிலாளர்கள் கூறினர். மிகப் பற்றாக்குறை நிலவுகின்ற கூலி வேலையைப் பெற்றோர்கள் நம்பியிருக்கின்றமையால் தமது பிள்ளைகளைக் கவனிப்பதற்கு அவர்களுக்கு நேரம் இருப்பதில்லை. இதனால் சிறுவர்கள் சிறுவயதிலேயே போதைப் பொருளை நாடிச்செல்கின்றனர். எனவே சிறுவயதிலேயே போதைப் பொருட்களின் அறிமுகம் கிடைப்பதனூடாக அவர்கள் சுரண்டல்களுக்கு உள்ளாகின்றனர். பெண் குழந்தைகள் கவனிக்கப்படுவதற்காக அனுப்பப்படும் கோயில்கள் போன்ற இடங்களில் கூட அவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

### சுகாதாரம் - தொழிலாளர்களே உற்பத்தியின் காரணகர்த்தா

பாரதூரமான நோய்களுக்குக்கூட சுகவீன விடுறையைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதாகத் தொழிலாளர்கள் முறையிட்டனர். எல்லா நோய்களுக்கும் பெனடோல் மாத்திரையும் சித்தாலேபயுமே பயன்படுத்தப்படுவதாக அவர்கள் கூறினர். தொழிலாளி சோர்வடைந்து மயங்கி விழுந்தாலும்கூட தன்னால் தொடர்ந்தும் வேலைசெய்ய முடியும் என அவள் உணரும் வரை, தொழிற்சாலை முகாமைத்துவமானது 'நோயாளர் ஓய்வறையில்' அமர்ந்திருப்பதற்கே அவளை அனுமதிக்கின்றது.

'தொழிலாளியை ஆரோக்கியமாக வைத்திருங்கள். அப்போதுதான் உற்பத்தியைத் தொடர முடியும்' என தொழிற்சாலைகளில் பணி நெறிமுறைகள் இருப்பதாகத் தெரிகின்றது. ஆனாலும், கிட்டத்தட்ட எல்லாத் தொழிலாளர்களும் இரைப்பைக் குடல் செயலிழப்பு, அதிக சோர்வு மற்றும் உடல் வலி என்பன குறித்து முறையிட்டனர். முள்ளந்தண்டு சிக்கல்கள், சுவாசிப்பதில் சிரமம் மற்றும் ஒழுங்குமுறையற்ற மாதவிடாய் ஆகியன குறித்தும் வேறுசிலர் முறைப்பாடு செய்தனர்.

சுகவீன விடுமுறைக்கான ஏற்பாடு வெறுமனே காகிதங்களில் மாத்திரமே காணப்படுவதாகத் தொழிலாளர்கள் குறிப்பிட்டனர். சுகவீன விடுமுறைக்கு சம்பளம் செலுத்தப்பட வேண்டுமெனில் அவர்கள் மருத்துவச் சான்றிதழ் பெற்றுவர வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்படுகின்றனர். அவ்வாறு மருத்துவச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு அவர்கள் மேலதிகமாக விடுமுறை எடுத்து மேலதிகமாகப் பணத்தையும் செலுத்த வேண்டியுள்ளது. அவ்வாறு செய்த பிற்பாடும் தொழிற்சாலை அவர்களுக்கான சம்பளத்தைச் செலுத்தாமல் இருப்பதற்கான வழிகளைக் கண்டறிகின்றது.

சில தொழிற்சாலைகள் பெண்களுக்கு ஏற்படுகின்ற மாதவிடாயானது தங்களது உற்பத்திகளில் பாதிப்பை ஏற்படுத்துவதாகக் கருதி அத்தகைய மாதவிடாயின் கால இடைவெளியைக் கட்டுப்படுத்துவதற்கான மாத்திரைகளை அவர்களுக்குக் கொடுக்கத் தொடங்கின என்றும் தொழிலாளர்கள் குறிப்பிட்டனர். குறித்த தொழிற்சாலைகள் மாதவிடாய்க் காலங்களில் பெண்கள் அனுபவிக்கும் வயிற்று வலியைக் குறைப்பதற்காகவே இத்தகைய மாத்திரைகள் வழங்கப்பட்டதாக ஆரம்பத்திலேயே அவர்களுக்குத் தெரிவித்தமையினால் தொழிலாளர்கள் அதன் தாக்கம் பற்றி உணரவில்லை.

9ஆம் பக்கம்...

**ஜனாதிபதி வேட்பாளர்களிடம்...** (8ஆம் பக்கத் தொடர்ச்சி)




**நீண்ட வேலை நேரம் - நீர் அருந்தவோ மலசலகூடத்துக்குச் செல்லவோ நேரம் இல்லை**

தொழிலாளர்கள் நீண்ட வேலை நேரம் பற்றியும் குறிப்பிட்டனர். அவர்கள் தொடர்ச்சியாக 10 மணித்தியாலங்களுக்கும் மேலாக நின்றுகொண்டே இயந்திரங்களில் வேலைசெய்ய வேண்டியுள்ளது. இதன்போது மதிய உணவு இடைவேளைக்கான 30 நிமிட ஓய்வு மாத்திரமே கொடுக்கப்படுகின்றது. மலசலகூடத்தைப் பயன்படுத்த அல்லது நீர் அருந்த எடுத்துக்கொள்ளும் குறுகிய இடைவேளைகூட உற்பத்தியையும் அவர்களின் ஒட்டுமொத்த அணியின் உற்பத்தித்திறனையும் பாதிக்கக்கூடும் எனக் கருதப்படுகின்ற ஒரு முறைமையே உள்ளது. இது ஒரு அலகின் உற்பத்தியையும் எல்லாத் தொழிலாளர்களினதும் வருகையையும் அடிப்படையாகக்கொண்டு கணக்கிடப்பட்டு அவ்வலகின் உற்பத்திக்காகக் கொடுக்கப்படும் போனஸையும் பாதிக்கின்றது. எனவே, தாம் நீர் அருந்தத் தேவையில்லை எனத் தொழிலாளர்கள் கருதுகின்றனர். இந்நிலை காலப்போக்கில் சிறுநீரக நோய்களுக்கு வழிவகுக்கின்றது.

**கட்டாய மேலதிகநேர வேலை**

மேலதிகநேர வேலை தொழிலாளர்கள் மீது திணிக்கப்படுவதுடன் அது நடைமுறையில் தொழிலாளர்களின் விருப்பத் தெரிவுக்குரிய ஒரு விடயமாகவும் காணப்படவில்லை. மேலதிகநேர வேலைக்குக் கொடுப்பனவு வழங்கப்படுவது ஒருபுறம் இருந்தாலும், அதற்கான விருப்பத்தெரிவு தமக்கு வழங்கப்பட்டால் எம்மால் நேரகாலத்துடனேயே வீட்டுக்குச் செல்ல முடியுமாக இருக்கும் என தொழிலாளர்கள் தெரிவித்தனர். ஏனெனில், தொடர்ச்சியாக எட்டு மணித்தியாலங்கள் வேலை செய்வதால் ஏற்கனவே தமது உடல்கள் களைப்படைந்து போவதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

**வேலைத்தள பாதுகாப்பு ஊக்குவிக்கப்படவில்லை**

முகமூடி போன்ற பாதுகாப்புக் கருவிகளை அணிய வேண்டுமென தொழிலாளர்கள் ஊக்குவிக்கப்படவில்லை. தொழில் திணைக்கள அதிகாரிகள் சோதனையிடுவதற்கு வரும்போது மாத்திரமே அவை அணிவதற்காக வழங்கப்படுகின்றன. வேலைத்தள பாதுகாப்பு பயிற்சிகள் குறித்துப் பேசப்படுவதுகூட இல்லை. தொழிலாளர்கள் தீ விபத்து அல்லது வேறு அவசரகால நிலைமைகளின்போது தம்மை எவ்வாறு பாதுகாத்துக்கொள்வது என்பது பற்றிய அறிவு இல்லாத நிலையிலேயே உள்ளனர்.

**'டான்சிங் மொடல்' (Dancing Model)**

தொழிலாளர்கள் பல இயந்திரங்களில் சுழற்சி முறையில் பணிபுரியும் 'டான்சிங் மொடல்' என்ற வேலை முறைமை பற்றியும் முறையிட்டனர். தொடர்ச்சியாக நீண்ட நேரம் வேலை செய்வதால் தொழிலாளர்களின் கால்களில் ஏற்படும் வலியைக் குறைப்பதற்காக இந்த வேலை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

**பாலியல் தொந்தரவு**

தொழிற்சாலை ஒன்றின் தொழிலாளர்கள் அதன் முகாமையாளரினால் மேற்கொள்ளப்படும் பாலியல் தொந்தரவுகள் பற்றி முறையிட்டனர். பெண் தொழிலாளர்களின் தோற்றங்களை அடிப்படையாக வைத்து பாரபட்சம் காட்டுதல், வருடாந்த நிகழ்வொன்றுக்காக உடல் அங்கங்களை வெளிப்படுத்தும் விதத்திலான ஆடைகளை அணியுமாறு பெண் தொழிலாளர்கள் கட்டாயப்படுத்தப்படுதல், உதவி முகாமையாளர்களினால் மேற்கொள்ளப்படும் தவறான வார்த்தைப் பிரயோகங்கள் மற்றும் உடல் ரீதியிலான துஷ்பிரயோகம் என்பன குறித்து முறைப்பாடு செய்யப்பட்டன.

**கோரிக்கைகள்**

1. எல்லாத் தொழிலாளர்களுக்கும் ஒழுக்கமான வீட்டு வசதி.
2. கிராமப்புற வீதிகளை நிர்மாணித்தல், தெருவிளக்குகளைப் பொருத்துதல், தெருக்களில் பெண்களுக்கான பாதுகாப்பு (பெண் பொலிஸ் காவலரண்கள்)
3. சொந்தக் காணிகளில் வசிக்காத தொழிலாளர்களுக்கான காணி விநியோகம்.
4. குழாய்நீர் விநியோகம் மற்றும் மின்சாரம் உட்பட அடிப்படைப் பொது வசதிகளுக்கான அணுகுகை.
5. தொழிலாளர்களுக்கு சம்பளத்துடனான கட்டாய விடுமுறையும் அதனை கண்டிப்பாக நடைமுறைப்படுத்தலும்.
6. மிகச்சிறந்த தொழில் நிலைமைகளை உருவாக்குகின்ற மற்றும் தொழிலாளர்கள் தொழிற்சங்கமயப்படுத்துவதற்கு உகந்த சூழல் ஒன்றைத் தோற்றுவிக்கின்ற வலுவான தொழில் சட்டங்கள்.
7. மேலதிக நேர வேலை மற்றும் வேலைத்தளத்தில் இடம்பெறும் பாலியல் தொந்தரவு என்பன பற்றிய சட்டங்கள் உட்பட, ஏலவேயுள்ள தொழில் சட்டங்களைக் கண்டிப்பாக நடைமுறைப்படுத்தல்.

# எண்ணம்

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் 35 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்களாம். சிலர் இடையிலேயே விலகுவார்கள். சிலர் மாறி விட்டார்கள். இந்த சிறிய நாட்டை ஆட்சி செய்வதற்கு முன்வருபவர்கள் தாம் சொல்வது போல நாட்டுப்பற்றாளர்கள்தானா? இந்த இலங்கையை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன்தான் அவர்கள் போட்டியிடுகிறார்களா? இல்லாவிட்டால் இந்த சிறிய தீவை மேலும் பாதாளத்தில் தள்ளிவிட முயற்சிக்கிறார்களா? என தீர்மானிக்க முடியாமல் மக்கள் திண்டாடுகிறார்கள். உள்ளவர்கள் அனுபவிக்கிறார்கள். இல்லாதவர்கள் துன்பப்படுகிறார்கள். எங்களைப் பற்றியும் பெரியாக்கள் கதைத்தால் அது எம்மை மேலும் அடிமைப்படுத்துவதற்காகவே…

நாட்டின் அந்நிய செலாவணியில் 1/3 பங்கை உழைக்கும் இந்த ஆடைத் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் தொடர்பில் எந்த அரசியல்வாதி பார்த்தார்? அனைத்துத் தொழிலாளர்களுக்காகவும் யார் மேடையில் கூச்சலிடுகிறார்கள்? நாட்டின் அடிப்படைத் தூண்கள் தொழிலாளர்களே தவிர அந்தக் கதிரைகளைச் சூடாக்கும் அமைச்சர்கள் அல்லர். அவர்கள் வந்து ஐந்து ஆண்டுகள் இருந்து ஐந்து பரம்பரைக்குச் சொத்துசெல்வத்தைச் சேர்க்கிறார்கள். ஆனால் தொழிலாளர்கள் ஒரு வார வாழ்க்கைக்காக ஐயாயிரம் தேடுவதற்காக ஒரு வாரம் முழுவதுமே முதலாளிமாருக்கு அடிமைச் சேவகம் செய்ய வேண்டும்…

மேடைகளில் ஏறி நான் அதைச் செய்வேன். இதைச் செய்வேன். தொழிற்சாலைகளை சொர்க்கபுரிகளாக ஆக்குவோம் எனக் கூச்சலிடுகின்றனர். எப்படியான சொர்க்கபுரியை உருவாக்கினாலும், அல்லலப்படும் எமது தொழிலாளர்களின் உரிமைகள் தொடர்பில் எவராவது கதைக்க வந்தார்களா? ஆட்சிக்கு வந்த பின்னர் மீளப் பிறந்தவர்கள் போல தாம் சொன்னவற்றை எல்லாம் மறந்து விடுவார்கள். அவர்கள் மறந்தாலும் அவற்றை மக்கள் நன்றாக நினைவில் வைத்திருக்கிறார்கள். அரச சேவையில் உள்ளவர்களுக்கு ஒரு விதமான கவனிப்பு. தனியார் துறைக்கு இன்னொரு விதமான கவனிப்பு. எப்போது தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டங்களுக்காக வீதிக்கு இறங்கினார்கள். ஓட்டைக் கரண்டியினால் தொழிலாளர்களுக்கு பகிரப்படுகின்றன.

நாங்க உண்மையான அடிமைகள்தான்… 14 மணித்தியாலம் வேலை செய்தாலும், என்னதான் குத்துக்கரணம் அடித்தாலும் எடுக்கிற மாதச் சம்பளம் இருக்கிற செலவுக்குக் காணாது. அரசாங்கமே சொல்லுறது போல நாட்டின் கால்வாசிப் பேர் மத்திய கிழக்கு நாடுகளில்… கல்வியின்றி, தொழிலின்றி இள வயதினர் வீதிகளில்… அது ஆட்சியாளர்களின் தவறல்ல. அடிமைகள் போல வாழ விரும்பும் மனிதர்களின் பிரச்சினையே அது. வேலை செய்யும் தொழிலாளர்கள் எப்போதும் வியர்வை சிந்துகிறார்கள். கட்சிகள் சொல்வது போல் மக்களுக்கு சேவை செய்திருந்தால் நாட்டில் அரைவாசிப்பேர் ஏன் நாட்டை விட்டுச் செல்லப்போகின்றனர்?

மேடைகளில் காது கிழியக் கத்துகிறார்கள். சனங்களை நிரப்புகிறார்கள். மனிதர்கள் தொடர்ந்தும் அடிமைகள் அல்லர். இந்த ஆட்சியாளர்கள் மக்களின் வரிப் பணத்திலிருந்து உல்லாசம் அனுபவிக்க தொடர்ந்தும் வாய்ப்பளிக்கக் கூடாது. இப்போதாவது நாம் சிந்தித்துச் செயற்பட வேண்டும். நாட்டில் பிரஜைகள் இருக்க வேண்டுமே தவிர அடிமைப்பட்டவர்கள் தேவையல்ல. வேலை விட்டு வீட்டுக்குப் போய் தொலைக்காட்சியைப் போட்ட உடனே அது தருவேன், இது தருவேன் என்ற கூச்சலே கேட்கிறது…

அதுகளச் சொல்லுற மனிதர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளையாவது இந்த இரண்டு அரசாங்கங்களுக்கும் கொஞ்சக் காலத்துக்கு முன்னர் ஏன் செய்ய முடியாமல் போனது? குறுகிய மனப்பாங்கு கொண்ட, அவ்வப்போது அச்சுறுத்தல் வரும்போது கட்சி தாவும் மக்கள் பிரதிநிதிகள் நாட்டுக்குச் செய்த நன்மைகள்தான் என்ன? நாட்டின் உயிர்நாடியான தொழிலாளர்கள் மீதே அனைத்துச் சுமைகளும் சுமத்தப்படுகின்றன. அதற்கு பெறுமதியை வழங்கி அவர்களுக்கு இந்த நாட்டின் முழுமையான அபிவிருத்திக்கு உதவும் அந்த உழைப்பின் பெறுமதியை மதித்து அவர்களை வலுப்படுத்தாமல் அவர்கள் வாழ முடியாத நிலைக்குத் தள்ளும் ஆட்சியாளர்களை நியமிப்பதனால் என்ன பயன் கிட்டும்…? தொழிலாளர்களுக்காகக்குரலெழுப்பும், விசேடமாக உழைப்பின் பெறுமதியை இலங்கைக்குக் கொண்டுவரும் வெளிநாட்டுத் தொழிலாளர்கள் எவரோ அந்த மனிதர்களுக்காகப் பேசுகிறார்கள். ஆனால் ஆகக் குறைந்தது அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமைகூட இல்லை.

அவ்வாறுதான் நாமும் இந்த வர்த்தக வலயங்களுக்கு வந்து வாழும் துன்பியல் வாழ்க்கை. எமது சக்தியை செலவிட்டு வழங்கும் உற்பத்திகளுக்கு பெறுமதி இருந்த போதிலும் எமது வியர்வைக்கு விலை கிடைக்கிறதா? அதன் காரணமாகவே 71 ஆயிரம் தொழிலாளர் வெற்றிடம் வர்த்தக வலயங்களில் உள்ளன. நன்றாகப் புரிந்து கொள்ளக்கூடிய ஆட்சியாளர்கள் சொல்வது போல இந்த நாட்டில் தொழில் வாய்ப்புக்கள் உள்ளன. அது சரிதான். ஆனால் எந்தவொரு தொழிலாளிக்கும் வாழ்க்கைப் போராட்டத்துக்குப் போதுமான சம்பளம் கிடைப்பதில்லை. அவர்களுக்குக் கிடைக்கும் சொற்பப் பணத்தில் வாழ முடியாது. அரசியல்வாதிகளின் போட்டிக்கு ஒருவருக்கு ஒருவர் சளைக்காமல் ஒவ்வொரு நாளும் வெளியிடும் கொள்கை வெளிப்படுத்தல்களில் காணப்படுகின்ற தேவதைக் கதைகளால் மக்கள் ஏமாற முன்னர் அவற்றுக்குத் தீர்வு வழங்குங்கள்.

சமந்தா

**அவள்...** (2ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்க்கையில் ஒரு நாளும் தோற்றுப்போகத் தயாரில்லை. வீழும் சந்தர்ப்பங்கள் அனைத்திலும், முன்னரை விடவும் நிறைவான மனதுடனும், புத்தியுடனும் எழுந்து நிற்கிறாள்.

பெண் என்ற ரீதியில் தனது கணவரின், பிள்ளைகளின் மற்றும் பெற்றோரின் அனைத்துச் செயற்பாடுகளையும் நல்ல முறையில் முகாமைத்துவம் செய்து மேற்கொள்வதுடன்,சேமித்தவற்றைப் பாவித்து பொறுப்பான பெண் என்ற ரீதியில் அந்த அறிவைப் பயன்படுத்தி உங்களால் விழிப்படையச் செய்ய முடியும் என்பதுடன்,அதன் மூலம் உங்களது வாழ்க்கையை முன்னரை விடவும் பெறுமதியானதாக ஆக்கிக்கொள்ளவும் முடியும்.

ஒரு கணப்பொழுதில் அனைத்தும் சுனாமி போல் அடிபட்டுப் போகும்போது கூட உங்களால் சளைக்காமல் இருக்க முடியும். என்றாலும், அந்தப் பலத்தை இனங்காண்பதற்கு நீங்கள் முயற்சிக்க வேண்டும். அனைத்தும் உங்களது தலையில் இடிந்து விழும்போது அவற்றுக்கு அஞ்சாமல் முகங்கொடுப்பதற்கான கேடயம் உங்களிடம் இருக்கிறது. அது எதுவென இனங்காண்பதே மிகவும் பொருத்தமானதாகும். எப்போதும் எம்மருகில் வசந்தம் வீசாது. அனைத்து நெருக்கடிகளுக்கும் முகங்கொடுத்து வசந்தத்தை நோக்கிச் செல்ல வேண்டும்.

கைவிடக்கூடிய அனைத்தையும் கைவிட்டு அவை அனைத்தையும் சிரத்தையின்றி பார்த்துக் கொண்டிருப்பதற்கும், மன உறுதியுடன் அனைத்தையும் தாங்கிக்கொண்டு நல்லதே நடக்கும் என சிந்தித்துக்கொண்டு பார்க்கும் பெண்ணுக்கு அவளது பயணப்பாதையின் தடைகளை அகற்றி சீர்செய்து நீண்ட பயணம் செல்லும் ஆற்றல் உள்ளது. அனைத்துமே மாற்றமடையக் கூடியது என்பது வலுவான உண்மையாகும். சிறு காற்றுக்கு வளைந்து கொடுத்தாலும், கடும் காற்றில்கூட முறிந்து போகாத மூங்கில் போன்று பெண் என்பவள் பலமானவள் ஆவாள். நாம் எப்போதும் எம்மைச் சுற்றியுள்ள அனைத்தும் இல்லாமல் போகும் என பயப்படுகின்றோம்.


தாய்மையடைதல் வலி மிக்கது, பிள்ளையைப் பிரசவிப்பது வலி மிக்கது, தமது பிள்ளைகள் அழுவதைக் காண்பது வலி மிக்கது,பிள்ளைகள் சுகவீனமடைவது வலி மிக்கது. ஆக பிள்ளை கருவுற்றதிலிருந்து அவள் அனுபவிப்பது பல்வேறுவிதமான வேதனைகளாக இருந்த போதிலும். வாழ்நாள் முழுவதும் மகிழ்ச்சியுடன் சிரித்துக்கொண்டு பிள்ளைகளை இதயத்தில் வைத்திருப்பது அவளே. உண்மையிலேயே பெண் என்பவள் ஒரு சிறப்பான படைப்பே.

மனீா பெர்ணான்டோ

# பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிக்கும் சர்வதேச தினம்

உலகெங்கும் பரந்துள்ள பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகள் மீது இழைக்கப்படும் துன்புறுத்தல்களுக்கு எதிரான விசேட தினமாக நவம்பர் 25 ஆம் திகதி பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அது டிசம்பர் 10 ஆம் திகதி, அதாவது சர்வதேச மனித உரிமைகள் தினம் வரை முன்னெடுக்கப்படுகின்றது. இன்றைய உலகிலுள்ள அனைத்து நாடுகளிலும் பரவி, ஓயாது செல்லும் மனித உரிமை மீறல்களில் ஒன்றாக இது காணப்படுகின்றது. பொதுவாகப் பார்க்கும் போது அது உடல், உள மற்றும் பாலியல் ரீதியான பல்வேறு விதங்களில் பெண்களை பாதிப்படையச் செய்கின்றது. நெருங்கிய உறவினரான வாழ்க்கைத் துணையினால் மேற்கொள்ளப்படும் துன்புறுத்தல்கள் (அடித்தல், உள ரீதியான துன்புறுத்தல், பாலியல் வன்புணர்வு, திருமணத்துக்குப் பின்னரான பாலியல் வன்புணர்வு), பாலியல் துன்புறுத்தல்கள் மற்றும் தொந்தரவுகள் (இள வயது பாலியல் வன்புணர்வு, கடத்திச் செல்லுதல், சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம், கட்டாயத் திருமணம்) மற்றும் வஞ்சக் கடத்தல் (அடிமைத்தொழில், பாலியல் சுரண்டல்) போன்றவை இதில் உள்ளடங்குகின்றன. இதனை மேலும் தெளிவுபடுத்துவதற்காக 1993 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் வெளியிடப்பட்ட பெண்களுக்கெதிரான துன்புறுத்தல்களை இல்லாதொழிக்கும் பிரகடனத்தில் பெண்களுக்கெதிரான துன்புறுத்தல் தொடர்பான வரைவிலக்கணமாக, பால்நிலை அடிப்படையிலான துன்புறுத்தல்களின் பெறுபேறாக அல்லது பௌதிக அல்லது அதன் பெறுபேறாக அமையும் பாலியல் தொடர்பான எந்தவொரு செயற்பாடும் என சொல்லப்படுகின்றது. அவ்வாறான செயற்பாடுகளில் அச்சுறுத்தல், பலவந்தமாக அல்லது தான்தோன்றித்தனமாக சுதந்திரம் இழக்கப்படுதல், பொது அல்லது சொந்த வாழ்வில் ஏற்படும் மன அழுத்தம் அல்லது பெண்களுக்கு ஏற்படும் கவலைகள், வேதனைகள் அனைத்தும் துன்புறுத்தல்களாகும். பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பில் பல ஆண்டுகளாகக் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அவற்றுக்கு எதிராகக் கொள்கைகள் வகுக்கப்பட்ட போதிலும், முன்னரை விடவும் தற்போது தொடர்ச்சியாக வன்முறைகள் இடம்பெறுகின்றன. பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகள் மூன்றில் ஒரு பகுதியினர் தமது வாழ்நாளில் பாலியல் துன்புறுத்தலை அனுபவித்துள்ளனர். பெரும்பாலும் அது அவர்களது நெருங்கிய உறவினர்களாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் உலகம் முழுவதும் கொலை செய்யப்பட்ட பெண்களில் ஒருவர் தனது வாழ்க்கைத்துணை அல்லது குடும்ப உறுப்பினரால் கொலை செய்யப்பட்டுள்ளவராகக் காணப்படுகின்றார்.

உலகம் முழுவதும் இடம்பெறும் வஞ்சக் கடத்தலில் (Human Traffickng) 71 சதவீதமானோர் பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகள் ஆவர். அவர்களுள் நால்வரில் மூவர் பாலியல் சுரண்டலுக்கு உள்ளாகின்றனர். ஏனைய நாடுகளிலும், இலங்கையிலும் இந்த நிலைமை தொடர்ந்தும் அவ்வாறே இருக்கின்றது. குறிப்பாக இலங்கை பொதுப் போக்குவரத்துச் சேவை, பணி புரியும் இடம் மற்றும் வீடுகளில் இடம்பெறும் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் ஆராய்ந்து பார்க்கும்போது இதனை அவதானிக்கலாம். இருப்பினும் நெருங்கிய உறவைக் கொண்டுள்ள தனது வாழ்க்கைத் துணையால் மேற்கொள்ளப்படும் துன்புறுத்தலாகவே வீட்டு வன்முறை கருதப்படுகின்றது. இலங்கையிலுள்ள 15 முதல் 49 வயதுக்கு இடையிலான திருமணமான பெண்களில் 17 சதவீதமானோர் வீட்டு வன்முறையால் பாதிக்கப்படுகின்றனர். சர்வதேச ரீதியில் இந்தப் பிரச்சினை தொடர்பில் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்த போதிலும், இந்த 21ஆம் நூற்றாண்டிலும் அவர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்படுகின்றனர் அல்லவா?



# அதிகாரத்துக்கும், பணத்துக்கும் அடிபணியாமல்...

மக்கள் விருப்பத்துக்கு அமையவே நாட்டை ஆட்சி செய்வதற்காக ஜனாதிபதி, பிரதமர், அமைச்சரவை நியமிக்கப்படுகின்றன. பல்வேறு இனங்கள் எமது நாட்டில் வாழ்வதனால் அவர்களது மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இனவாதம் இன்றி பாராளுமன்றப் பிரதிநிதிகள் நியமிக்கப்படுகின்றனர்.

ஆரம்ப காலத்தில் எமது நாடு அன்னியர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. அதிலிருந்து விடுபட்டு 1948 ஆம் ஆண்டில் சுதந்திரம் பெற்றோம். பல்வேறு மன்னர்களின் ஆட்சி நாட்டில் இருந்தது. அதன்போது ஒழுக்கத்துடனும், ஒருவருக்கு ஒருவர் மதிப்பளித்தும் அவர்கள் ஆட்சி செய்தார்கள். அத்துடன் நாட்டை அரிசியில் தன்நிறைவடையச் செய்வதற்காகக் குளங்கள் மற்றும் ஆறுகள் உருவாக்கப்பட்டன. பௌத்த சித்தாந்தத்தைப் பாதுகாப்பதற்காகப் பாரிய தாதுகோபங்கள், விகாரைகள் அமைக்கப்பட்டன.

அதன் பின்னர் உயர்குடி பிரபுக்கள் நாட்டை ஆட்சி செய்தனர். ஜே.ஆர்.ஜயவர்த்தன, எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க, சிறிமாவோ பண்டாரநாயக்க போன்றவர்கள் பெரும் நிலச் சுவாந்தர்கள் ஆவர். அதனால் அவர்கள் நாட்டைச் சுரண்டுவதற்கும், நாட்டின் சொத்துக்களை விற்பனை செய்வதற்கும், கோடிக்கணக்கில் கொள்ளையடிப்பதற்குமான தேவை அவர்களுக்கு இருக்கவில்லை.

விவசாயப் பொருளாதாரத்தின் அடிப்படையில் இலங்கை தேயிலை, தெங்கு, இறப்பர் மற்றும் வாசனைத் திரவியங்கள் என்பவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தது. அதன் மூலம் நாட்டுக்கான அன்னியச் செலாவணி ஈட்டப்பட்டது. மேலும் ஒழுக்கநெறிக் கட்டமைப்பில் பணியாற்றியதுடன், சட்டம் முறையாக அமுல்படுத்தப்பட்டதனை வரலாறு சுட்டிக்காட்டி நிற்கிறது. உதாரணமாக அரசுக்கு விரோதமாகச் செயற்பட்ட எஹெலேபொல குமாரிஹாமி மற்றும் அவரது பிள்ளைகள் யாவரும் மரண தண்டனைக்கு உள்ளானார்கள்.

இருப்பினும் தற்போதுள்ள அரச ஆட்சியில் அவ்வாறான விடயங்களைக் காண முடியாது. ஒருவருக்கொருவர் வசைபாடி ஆயிரக்கணக்கில் செலவிட்டு, மக்களின் முதுகில் ஏறி பாராளுமன்றம் செல்லும் பிரதிநிதிகள் மக்களுக்குச் சேவை செய்வதனை விடவும் தமது சொத்துக்களைப் பெருக்குவதற்கே செயற்படுகின்றனர். மக்களே பொருளாதாரச் சுமையைச் சுமக்கின்றனர். வரிச்சுமை வானுயர்ந்து சென்றுள்ளது. நாளுக்கு நாள் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வடைவதற்கு முடிவே இல்லை. தனியார்துறையில் பணியாற்றுவோரின் சம்பளம் மிகக் குறைவாக உள்ளது. அரசிடமிருந்து கிடைக்கும் சலுகைகள் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. அவ்வாறான நிலையில் மக்கள் பிரதிநிதிகள் தமது சம்பளத்தை அதிகரிக்க முற்படுகின்றனர்.

இன்று பாராளுமன்றத்தில் பிரச்சினைகளைத் தீர்க்கத் துடிக்கும் பாங்கினை ஊடகங்களில் பார்க்கக் கூடியதாக உள்ளது. அவர்கள் பாவிக்கும் சொற்கள், மோசமான நடத்தை, அடிபிடிப்படுதல் போன்றவற்றை இன்று பிள்ளைகள்கூட பார்க்க முடிகின்றது. தமது குடும்பங்களைப் பாதுகாப்பதற்காகவே அன்றி, நாட்டில் வாழும் ஏழைக் குடும்பங்களின் வருமானத்தை அதிகரிப்பதற்காக ஆட்சி அதிகாரத்தைப் பெற அவர்கள் முயற்சிக்கவில்லை.

ஜனாதிபதி தேர்தல் விரைவில் நடக்கவுள்ளது. ஒருரை ஒருவர் எள்ளிநகையாடி, இன்னமும் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். அதிகாரத்துக்கும், பணத்துக்கும் அடிபணியாமல் மக்களுக்குச் சேவை செய்த வரலாறுகள் உள்ளன. அவ்வாறான யுகம் மீண்டும் நாட்டில் உருவாகுமா என்பதே பாரிய கேள்வியாக உள்ளது.

எச்.ஐ.சமன்மலி

இல, 221, வெலபட வீதி, கட்டுநாயக்கவை வசிப்பிடமாகக் கொண்ட எச்.ஐ.சமன்மலி ஆகிய என்னால் ரத்வெகி அச்சகத்தில் அச்சிடப்பட்டது.